# Poets of Sangam Period (A.D. 200 – A.D. 500)

# சங்கம் மருவிய காலப்புலவர்கள் (கி.பி.200 – கி.பி. 500)

**Annaiyappan S. A.**

**DOI:** https://doi.org/10.34256/iorip1922

**தமிழ்ச்சமூகம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் நூல்கள் சங்க இலக்கிய நூல்களாகவும் அதனை இயற்றியபுலவர்கள் சங்க இலக்கியப்புலவர்களாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறது. இதனுடைய காலக்கட்டம் கி.மு.500 முதல் கி.பி.200 வரையில் அமைந்த காலப்பகுதியாகும். அடுத்து வருவது சங்கம் மருவியகாலப்பகுதியாகும். இக்காலத்தில் சங்கம்மருவிய இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றியன. இதனுடைய காலப்பகுதி கி.பி.200 முதல் 500 வரையிலான காலப்பகுதியாகும். காதல், வீரம், கொடை போன்ற சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கையின்பத்திலும் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம் அடுத்த தலைமுறைகளில் நீதிகளைப்பாடும் நிலைக்கு மாறியது. அந்தக் காலத்தைச் சங்கம்மருவியகாலம் அல்லது நீதிநூல்காலம் எனப் போற்றப்பெற்றது.**

## திருவள்ளுவர் (கி.பி.2-ஆம் நூற்றாண்டு)

திருவள்ளுவர் தமிழ்மறை எனப் போற்றப்பெறும் திருக்குறள் எனும் நூலின் ஆசிரியராவர். இவருக்கு முதற் பாவலர், தெய்வப்புலவர், மாதாநுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், தேவர், நாயனார் போன்ற வேறு பல பெயர்களும் உண்டு. இவருடைய பெற்றோரால் இவருக்கு இடப்பெற்ற இயற்பெயர் இது என்பதற்குரிய எந்த ஒரு வரலாற்று ஆதாரமும் எந்நூலிலும் இல்லை என்பது தமிழறிந்தோர் பெற்றிருக்கும் தகவலாகும். இவருடை வாழ்க்கை வரலாறு தெளிவாக

அறியப்படவில்லை. எனினும் இவருடைய தோற்றம் பற்றிப் பல கதைகள் வழங்கப்பெறுகின்றன. இவர் பிறந்த அல்லது வாழ்ந்து இருந்த இடம் யாது என்று உறுதியாகக் கூற இயலாது. சிலர் இவர் மதுரையில் இருந்ததாகக் கூறுவர். ஆயினும் பெரும்பான்மையானரின் கருத்து இவர் இன்று சென்னையின் ஒரு பகுதியாக உள்ள மயிலாப்பூரினர் (மயிலாப்பூரில் பிறந்தவர்; மயிலாப்பூர்க்காரர்) என்பதாகும். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தோன்றுகிறது. திருவள்ளுவர் என்னும் உலகப்பெரும் தமிழ்ப்புலவர் திருக்குறள் என்ற உலகப் பொது அறநெறி நீதிநூலைத் தமிழ்மொழியில் இயற்றித் தமிழால் திருக்குறளுக்கும் குறளால் தமிழுக்கும் பெருமைசேர்த்தார் என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த வரலாற்றுச் சான்றுகளும் வள்ளுவரைக் குறித்து இல்லை என்பது வருத்தத்திற்குரியது ஆகும். இவர் சங்ககாலத்தின் முதற்பகுதி ஆகிய முதலாம் நூற்றாண்டு என்று கருத இடமுண்டு; ஏனெனில் சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு ஆகிய நூல்களில் இவரது குறட்பாக்கள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை: ஒருவன்... செய்தி கொன்றோர்க் ... குய்தில்லென அறம்பாடிற்றே (புறம்.34:5 - 7); தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு வாளைத் ... தெய்வந்தொழுந்தகைமை திண்ணிதாம் (சிலப்பதிகாரம் கட்டுரை காதை வெண்பா); தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்... பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப் ... பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் (மணி.59 – 61). இன்னா செய்யாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை முதலிய அறங்களை வற்புறுத்தியிருத்தலின் திருவள்ளுரைச் சிலர் சமணர் என்பர். சிலர் 'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர்' என்னும் குறளை ஆதாரமாகக் கொண்டு, இவர் சைவர் என்பர். 'தாமரைக் கண்ணன் உலகு எனக் கூறியிருத்தலின் சிலர் இவர் வைணவர் எனக் கூறுவர். இவ்வாறே தத்தம் சமயக்கொள்கை குறளில் இருப்பதைக்கண்டு தத்தம் சமயச் சார்புடையவராகக் குறிப்பர். நூலோர் தொகுத்தவற்றுள் தலையாயவற்றைக் கூறும் இயல்பினராய் சமயப் பொதுமை வாய்ந்த வள்ளுவப்பேராசானை ஒரு சமயச் சார்புடையவராகக் கூறுதல் பொருந்தாது என்பதை இங்கு உணர வேண்டும்.

'நாடாது நட்டலிற் கேடில்லை நட்பின் வீடில்லை நட்பாள்பவர்க்கு' என்னும் குறட்கருத்து, 'நாடி நட்பின் அல்லது நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே' எனும் நற்றிணைப் பாடலில் அமைந்திருத்தலானும் 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் குறட் கருத்து 'ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென்று அறம்பாடிற்றே ஆயிழை கணவ' என்னும் புறநானூற்றுப் பாடலில் இருத்தலானும் இவை போன்ற பிற ஒப்புமையாலும் திருவள்ளுவர் காலம் சங்ககாலத்துக்கு முந்தையது என்று சான்றோர் எண்ணுவர். 'அறம் பாடிற்றே' என்பதில் உள்ள அறம் என்பது திருக்குறளைக் குறிக்கும் என்பது அவர்கள் கருத்து. ஆல், இல் என்னும் வேற்றுமையுருபுகள் மாட்டு, வேண்டி என்னும் சொல்லுருபுகள், 'மற்றையவர்கள்' என்பதுபோல் உயர்திணையாய் வரும் கள் விகுதி, தன்மை ஒருமையில் வரும் அன் விகுதி மரியாதை ஒருமையாகிய நீர் ஆகிய இலக்கணக்கூறுகளைக் குறள் வழக்காறுகள் கொண்டுள்ளதால் இது சங்ககாலத்துக்குப் பிந்தையது என்பர் சிலர். இவர்கள் குறள் வெண்பா யாப்பினையும் பிற்காலத்துக்குக் காரணமாகக் காட்டுவர். எளிமை கருதி வழக்குச்சொற்களைக் கையாள்வதால் சில பிற்கால வழக்காறுகள் கையாளப்படுதல் இயல்பேயாகும். கள்ளுண்ணாமையை வற்புறுத்தல், காமத்துப் பாலில் பரத்தையரைக் குறிக்காமை ஆகிய சமூகக்கூறுகளை ஆதாராமாகக் கொண்டு குறளின் காலம் சங்ககாலத்து இறுதி அல்லது அதனை ஒட்டிய பிற்காலம் என்று எண்ணுவது இங்கு பொருத்தமாகக் கருதலாம். இவர் படைத்த திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளை உடைமையால்இது , முப்பால் என்னும் பெயர் பெற்றுள்ளது. இம்முப்பாலில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கும் உணர்த்தப்பெறுகின்றன. இவர் அறத்தை இல்லறம், துறவறம் எனப் பகுத்துச் சிறப்பாக விளக்கியுள்ளார். வள்ளுவர் 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றும் 'ஆரா இயற்கை அவா' என்றும் 'அருளென்னும் அன்பின் குழவி' என்றும், வரையறை செய்வது சிறப்பாக உள்ளது. 'பாத்தூண்' சிறந்த அறம் என்பதைப் பலவிடங்களில் வற்புறுத்தியுள்ளார். ஆபத்துக்கும் பாவமில்லை

என்பதை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை; உயிரினும் மானமே சிறந்தது என்று கூறுவர். திருவள்ளுவர் விரும்பாதவை அல்லது மறம் அல்லது தீது அல்லது இன்னாதது என்று கருதியவை: கயமை, கள்ளுண்ணல், களவாடுதல், கூடாவொழுக்கத்தை மேற்கொள்ளுதல், உயிர்க்கொலை, சூதாடுதல், நல்குரவு, பயனிலசொல்லுதல், புறங்கூறுதல், பிறனில் விழைதல், புலால் உண்ணுதல், பிறர்க்கின்னா செய்தல், பெண்வழிச்சேறல் எனும் செயல்களாகும். இவர் இச்செயல்கள் சமூகத்திற்கு உதவாதசெயல்கள் என்று எண்ணி ஒதிக்கி வைத்துள்ளார். **திருவள்ளுவர் விரும்பியவை அல்லது அறம் என்று கருதியவை:** அடக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை, அறிவுடைமை, அவாஅறுத்தல், அழுக்கற்றிருத்தல், இனியவைகூறல், ஈகை, ஊக்கம் உடைமை, ஒப்புரவறிதல், கண்ணோட்டம், கல்வி, கேள்வி, செய்ந்நன்றி அறிதல், துறவு மேற்கொள்ளுதல், தவஞ்செய்தல், நடுவுநிலையுடைமை, நாணுடைமை, பண்புடைமை, பொறையுடைமை, வாய்மை, விருந்தோம்பல் முதலியவையாகும். பொதுமறையான திருக்குறளின் உரையாசிரியர்கள் கீழ்க்கண்ட பதின்மர் (10) ஆவர்: 1.தருமர், 2.மணக்குடவர், 3.தாமத்தர், 4.நச்சர், 5.பரிதி, 6.திருமலையர், 7.பரிமேலழகர், 8.மல்லர், 9.கவிப்பெருமாள், 10.காளிங்கர்.

## பாகுபாடு

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பொருள்களுள் முதல் மூன்றையும் பற்றி 1330 குறட்பாக்களால் விளக்குவது திருக்குறள். நெறியோடு இந்த உலகத்தில் வாழ்ந்தால் தானாகவே அமைவது முக்தி என்பதும் சிந்தைக்கு எட்டாத அந்த முக்தியைப் பற்றிச் சொற்களால் விளக்கிக்கொண்டிருப்பது வீண் என்பதும் திருவள்ளுவரின் கருத்தாக இருக்கக்கூடும். அதனால் அவர் வீடுபற்றி விளக்கவில்லை; மெய்யுணர்தல் என்ற அதிகாரம் அதற்கு உரிய வழியைக்கூறுவதாகும். திருவள்ளுவர் பத்துப் பத்துக் குறளாகப் பகுத்து ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு பண்பையோ கொள்கையையோ விளக்குகிறார்; அறத்தை 380 குறளில் 38

அதிகாரங்களில் விளக்கியுள்ளார்; அரசியல் பற்றியும் அமைச்சர் முதலானவர்கள் பற்றியும் குடி மக்களின் பண்புகள் பற்றியும் இரண்டாம் பகுதியில் 700 குறளில் 70 அதிகாரங்களில் விளக்கியுள்ளார்; மூன்றாம் பகுதியில் உயர்ந்த காதலரின் காதல் பற்றிய கற்பனை 250 குறளில் 25 அதிகாரங்களில் விளக்கியுள்ளார். முதல் பகுதியைக் கற்பவர் அங்கே புத்தர் போன்ற ஒரு சான்றோரின் மொழிகளைக் கேட்கலாம். இரண்டாம் பகுதியில் தேர்ந்த அரசியல் அறிஞரின் உரைகளைக் கற்கலாம். மூன்றாம் பகுதியில் திருவள்ளுவர் கற்பனைச் செல்வம் மிகுந்த ஒரு கவிஞராக விளக்கிக் காதலனையும் காதலியையும் பேசச் செய்கிறார். ஒழுக்கமிலான்கண் உயர்வு ‘தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால் அம்மா அரிவைமுயக்கு’ என்பன போல அறக்கருத்துக்களையே உவமையாக்கிக்கூறும் அழகினைத் திருவள்ளுவரிடம் காணலாம். இவர்தம் சிறப்புக் கருதித் திருவள்ளுவ மாலை என்னும் நூலே தோன்றியுள்ளது. இவர்தம் குறள் என்றும் புலராது; யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பயிற்றும் கற்பக மலர் போன்றது என்றும் சிறு புல்லிலுள்ள பனி நீர் பனையளவை அடக்கிக் காட்டுவதுபோல் திருக்குறள் காட்டுகிறது என்றும் ஓதற்கு எளிதாய் உணர்தற்கரிதாகி உள்ளுதோறும் உள்ளம் உருக்குகிறது என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர் )பாலுசாமி,2005:539 – 540).